(7) கவன ஈர்ப்பு

கல்லூரி ஆசிரியர்கள் அனைத்துச் சங்கமும் நடத்த இருக்கும் தேர்வுகளை மேற்பார்வையிடும் பணியை புறக்கணிப்பதென எடுத்த முடிவும் அதன் விளைவுகளும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து 41 வது விதியின் கீழ், திருவாளர்கள் ஆர். உமாநாத், ஆர். கிருஷ்ணன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம், ஏ. ஆர். பாரிமுத்து, சோ. அழகர்சாமி, எம். ஏ. லத்தீப், ஜே. ஜேம்ஸ், பொ. விஜயராகவன், ரா. மார்க்கபந்து, ப. சந்திரன், ஏ. ரகுமான்கான், துரைமுருகன், ஆகியோர் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறார்கள். திரு. ஆர். உமாநாத்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, கல்லூரி ஆசிரியர்களின் அனைத்துச் சங்கங்களும் மாநிலம் முழுவதும் நடக்க இருக்கும் தேர்வுகளை மேற்பார்வையிடுவதைப் புறக்கணிப்பதென முடிவெடுத்தது பற்றியும், அதன் விளைவாக பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் தேர்வு எழுதுவது பாதிக்கப்பெறக்கூடிய அபாயம் ஏற்பட்டிருப்பது பற்றியும் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

(முற்பகல் 10.30)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இவ்வரசு பல்கலைக் கழக மானியக் குழு பரிந்துரைத்த ஊதிய விகிதங்களை அமல்படுத்துவதிலுள்ள பல்வேறு நிலைகளை விவரமாக ஆய்ந்தறிந்த பின்னர் கல்லூரி மற்றும் பல்கலைக் கழக ஆசிரியர்களின் ஊதியங்களை மாற்றி அமைத்து 21—9—1977 அன்று ஆணைகள் பிறப்பித்துள்ளது. இவ்வாணைகளின்படி திருந்திய ஊதிய விகிதம் 1—4—1976 முதல் நடைமுறைக்கு கொணரப்படும். ஆயின் இதற்கான பணப்பயன் 1—1—1977 முதல் ஆசிரியர்களுக்குக் கிட்டும். பின்னர் பயிற்றுநர் மற்றும் விளக்குநர்கள் விடுத்த கோரிக்கைகளை ஏற்று இவ்வரசு தமது ஆணை எண். 2659, கல்வி, நாள் 28—12—1977-ல் திருந்திய ஊதிய விகிதங்களை அமுல்படுத்துவதில் பட்ட மேற்படிப்பு கல்வித் தகுதியும், 1—12—1977 அன்று 5 ஆண்டுகள் பணி நிறைவு எய்தியுள்ள பயிற்றுநர் மற்றும் விளக்குநர்கள் உதவிப் பேராசிரியர்களாக நியமிக்கப் பெறுவர் என்ற ஆணையையும் வழங்கியுள்ளது.

1978 மார்ச் 3] [திரு. செ. அரங்கநாயகம்]

பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் மற்றும் மதுரைப் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் ஆகியவைகள் பல்கலைக் கழக மானியக்குழு பரிந்துரைத்துள்ள ஊதிய விகிதங்களை 1—1—1973 முதல் நடை முறைக்குக் கொணர்தல் வேண்டும் என்று கோரி வருகின்றனர். தற்பொழுதுள்ள நிதிப் பற்றாக்குறை நிலையினால் 1—1—1973 முதல் திருந்திய ஊதிய விகிதங்களை நடைமுறைக்குக் கொணர இயலாத நிலையில் அரசு உள்ளது.

தற்பொழுது கல்லூரி ஆசிரியர் சங்க கூட்டு நடவடிக்கைக்குழு விடுத்துள்ள கோரிக்கைகளை அரசு மிக்க கவனத்துடன் பரிசீலித்து வருகிறது. மேலும் கல்லூரி மற்றும் பல்கலைக் கழக ஆசிரியர்களது முறையீடுகள் குறித்து அரசு இதுகாறும் பரிவுடன் பரிசீலித்து வந்துள்ளது. இனியும் அவர்களது குறைகளைப் போக்க ஆவன செய்ய வேண்டும் என்ற உறுதியும் பூண்டுள்ளது.

1977 டிசம்பர் திங்களில் மதுரைப் பல்கலைக் கழக ஆசிரியர் களின் தேர்வுப் பணிப் புறக்கணிப்பு நடவடிக்கையினால் மாண வர்களுக்கு எண்ணிலடங்கா இடர்பாடுகள் ஏற்பட்டுள்ளன. இதைக் கருத்தில் கொண்டும், ஆசிரியர்களின் இதரக் கோரிக் கைகள் அரசினரின் பரிசிலனையில் இருந்து வருவதாலும், தேர்வுப் பணிப் புறக்கணிப்பினால் மாணவர் மற்றும் பெற்றோர்கட்கு ஏற் படும் இடர்பாடுகளைத் தவிர்க்கும்பொருட்டும், கல்லூரி மற்றும் பல்கலைக் கழக ஆசிரியர்கள் தமது தேர்வுப் பணி புறக்கணிப்பது என்ற முடிவினைக் கைவிட்டு, வரும் தேர்வுகள் சிறப்பான முறை யில் நடைபெற ஒத்துழைப்பு நல்குவர் என்று அரசு நம்பிக்கை கொண்டுள்ளது.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, யு. ஜி. சி. ஸ்கேலை அமல் நடத்துவது சம்பந்தமாக 1—1—1973 முதல் அமல் நடத்த வேண்டுமென்ற அவர்களது கோரிக்கையைப் பற்றி அவர்கள் என்னமோ முரட்டுத்தனமாக நிற்பது போன்ற ஒரு எண்ணம் இந்த மாநிலத்தில் உண்டாக்கப்படுகிறது, அது உண்மையல்ல.

அவர்கள் சில மாற்று யோசனைகளையும் வைத்திருக்கிறார்கள். நிதிநிலைமை பற்றி அமைச்சரவர்கள் சொன்னதால் அவர்கள் ஐந்து மாற்று யோசனைகளை வைத்திருக்கிறார்கள். அந்த ஐந்து யோசனைகளில் ஏதாவது ஒன்றை ஏற்றுக்கொள்வீர்களா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

1—1—1973 முதல் அதை அமல் நடத்த வேண்டும். அதிலே அரியர்ஸ் கொடுப்பதிலே மாநில அரசாங்கம் கொடுக்கவேண் டிய பகுதியை ரொக்கமாகக் கொடுக்கவேண்டாம், பாண்டாகக் கொடுங்கள் என்ற மாற்று யோசனையை வைத்திருக்கிறார்கள். அல்லது மாநில சர்க்காரும் மத்திய சர்க்காரும் 1—1—1973

முதல் அமல் நடத்தி, கொடுக்க வேண்டிய முழு மானியத்தை, அரியர்ஸை அதையும் பாண்டாகக் கொடுக்கலாம், பணத்தை புயல் வெள்ள நிவாரணத்திற்காகப் பயன்படுத்திக் கொள்ளலாம். அல்லது சென்னை வைஸ்—சான்சலர் ஒரு ப்ரப்போசலை சொல்லியிருக்கிறார், 1—1—1974 முதல் அமல் நடத்தப்பட வேண்டும் என்று. அதையாவது ஏற்றுக்கொள்கிறீர்களா?

நான்காவதாக, தேதியை மாற்ற முடியவில்லை என்றால் அந்தத் தேதியிலிருந்து அமல் நடத்தி பஞ்சப்படியையாவது தனியாகக் கொடுப்பீர்களா என்ற மாற்று யோசனையும் இருக்கிறது.

இறுதியாக ஸ்கேலை 1—1—1973-இலிருந்து அமல் நடத்தி மானிடரி பெனிஃபிட்டை 1—1—1977 முதல் அமல் நடத்துவது. எனவே, இதில் அவர்கள் முரட்டுத்தனமாக நிற்கவில்லை. ஐந்து ஆல்டர்நேட்டிவ்ஸை வைத்திருக்கிறார்கள். கவர்ன்மெண்டுக்கு விரிவான ப்ரேம் ஒர்க் இருக்கிறது. இந்த ஐந்தில் ஏதாவது ஒன்றை ஒத்துக்கொள்கிறீர்களா? அல்லது இவைகளை சீரியஸாகப் பரிசிலனை செய்வதற்கு அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா? (மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. உமாநாத் அவர்கள் சுருக்கமாகப் பேசலாமே.

திரு. ரா. உமாநாத்: நான் முடித்த பிறகுதான் தாங்கள் மணியடித்தீர்கள்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் சில யோசனைகளை ஆசிரியர்களின் சார்பாக தெரிவித்தார்கள். நேற்றைய தினம் ஆறு மணி முதல் ஒன்பது மணி வரைக்கும் அந்தப் பிரதிநிதிகள் என்னைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது இதிலே கூறப்பட்ட சில யோசனைகளைச் சொல்லவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் வேறு சில யோசனைகளைச் சொன்னார்கள். மறுபடி ஞாயிறு காலை 8-00 மணிக்கு சந்தித்துப் பேசி, சுமுகமான முடிவுகளை மேற்கொள்ளலாம் என்று சொல்லிவிட்டுச் சென்றிருக்கிறார்கள். ஆகவே, அந்த அளவில் இந்தப் பிரச்சினை பேசப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

திரு. ஏ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பல்கலைக் கழக மானியக் குழுவின் சிபாரிசின் படி 1973-வது ஆண்டிலிருந்து அமுல் நடத்தப்பட வேண்டு மென்று இன்றையத்தினம் ஆசிரியர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். பல்வேறு மாநிலங்களில், 1973-வது ஆண் டிலிருந்து அது அமுல் நடத்தப்படுகிறது. இந்த மாநில அரசுக்கு என்ன நிதிப் பிரச்னையோ அதேவித பிரச்சினைத்தான் இந்தியாவி லுள்ள இதர மாநிலங்களுக்கும் இருக்கின்றது.

அது மட்டுமல்ல, பல்கலைக் கழக மானியக் குழுவின் சிபாரிசை அமுல்படுத்த ஆகும் செலவில் 80 சதவீதத்தை மத்திய அரசு ஏற்றுக்கொள்கிறது. மாநில அரசு 20 சதவீதத்தைத்தான் ஏற்றுக் கொள்கிறது. அதையும் 5 ஆண்டுகளில் கொடுக்கலாம். அப்படியிருக்கும்போது, அவர்களது நியாயமான கோரிக்கையை ஏன் இந்த அரசு ஏற்றுக்கொள்ளவில்லையென்பது முதல் கேள்வி.

இரண்டாவது, 10 பிளஸ் 2 பிளஸ் 3 என்ற புதிய கல்வித் திட்டத்தின் காரணமாக கல்லூரியை விட்டு 2 பிளஸை நீக்குவ தால், கல்லூரி ஆசிரியர்கள் வேலைக்கு பாதிப்பு இல்லையென்று அரசு கூறுகிறது. பாதுகாக்கப்படுவார்கள் என்று சாதாரண உத்திரவாதம்தான் தரப்படுகிறதே தவிர, எந்தவிதத்தில் பாதுகாக்கப்படுவார்கள்? பாதுகாக்கப்பட என்ன திட்டம் இருக் கிறது என்று உறுதியாகச் சொல்ல முடியுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ரகுமான்கான் இன்று பேச பெயரையும் கொடுத்திருக்கிறார். கல்வி மானியத்திலே அழகாக, விளக்கமாகப் பேசலாம். திரு. ஜேம்ஸ் அவர்களுக்கும் அதையே சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அருமை நண்பர் ரகுமான்கான் அவர்கள் இந்தத் தேர்தலிலே தி. மு. கழகத்திலே வந்து சேர்ந்தார் என்று நான் கருதவில்லை. முன்னாலேயிருந்து அதிலே இருக்கிறார். 1973-லேயிருந்து 1976 ஜனவரி 31-ம் தேதி வரைக்கும் திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்தது. அந்தக் காலகட்டத்தில் இதை அமுல் படுத்தியிருக்க லாம். அப்பொழுது அந்த அரசினால் ஏற்கப்பட முடியாத சிபாரிசுகள்தான் இந்தப் பல்கலைக் கழக மானியக் குழுவின் சிபாரி சுகள். எனவே, அப்பொழுது என்ன சங்கடங்கள் இருந்தனவோ, அவைகள் இந்த அரசுக்கும் இருக்கும் என்பதை அவர்கள்முதலில் ஏற்றுக் கொள்ள வேண்டும். இருந்தாலும், நாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். இப்பொழுது அவர்களோடு பேசிக்கொண்டி ருக்கிறோம். பேசி நல்ல முடிவுகள் வரும் என்று எதிர்பார்க்கி றோம். அந்த அளவில் இதை முடித்துக் கொள்ளலாம்.